மக்கள் சிந்தனை

சமய சமுதாய இலக்கிய
திங்களிதழ்



தவத்திரு குன்றக்குடி அடிகளார்
மகளிர் கல்வியியல் கல்லூரி
திறப்பு விழா
5-3-2008

தமிழ் ஆண்டு 2039
பங்குனி - மார்ச் 2008

ரூ. 5.00

சிறப்பாசிரியர் : தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

மக்கள் சிந்தனை

சமய சமுதாய இலக்கிய திங்களிதழ்

விளம்பரக் கட்டணம்

விவரம்	அளவு	1 வெளியீடு	12 வெளியீடு
பின் அட்டை			
வெளிப்புறம்	1 பக்கம்	ரூ. 750	ரூ. 7500
அட்டை உட்புறம்	1 பக்கம்	ரூ. 650	ரூ. 6500
இதழ் உட்புறம்	1 பக்கம்	ரூ. 500	ரூ. 5000
இதழ் உட்புறம்	1/2 பக்கம்	ரூ. 350	ரூ. 3500

சந்தா விவரம்

தனி இதழ்	ரூ.	5-00
ஆண்டுச் சந்தா	ரூ.	60-00
ஆயுட் சந்தா	ரூ.	600-00
புரவலர் கட்டணம்	ரூ.	1000-00

சந்தா - விளம்பரம் அனுப்பவேண்டிய முகவரி :

நிர்வாகி,

மக்கள் சிந்தனை

குன்றக்குடி - 630 206

தொலைபேசி எண். 04577 - 264227

ஆதீன இணையதள முகவரி :

website : www.kundrakudiadheenam.org.

ஆசிரியர்

மரு. பரமகுரு

அச்சிட்டு வெளியிடுவோர் :

சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி.

மக்கள் சிந்தனை

நிறுவனர் : தவத்திரு குன்றக்குடி அடிகளார்

தமிழ்ஆண்டு 2039	மாதம் : பங்குனி
மலர் : 22	இதழ் : 3

அனைவரையும் அழைத்துச் செல்லும் ஆன்மீகத் தடம்!

தில்லைப் பதியில் திருச்சிற்றம்பல மேடையில் திருமுறைகள் ஓத இருந்து வந்த தடை நீக்கப்பட்டுள்ளது. கால வெள்ளம் தீந்தமிழ்த் திருமுறைகளை ஓத எவ்வளவு போராட்டத்தைச் சந்திக்க வேண்டி உள்ளது!

தில்லைப் பதியில் பொன் அம்பலத்து இறைவன் ஆடல் வல்லான் (நடராசர்), சேக்கிழார் பெரியபுராணம் பாட ?உலகு எல்லாம்? என்ற அடியை எடுத்துக் கொடுத்தான். தில்லை வாழ் அந்தணர் தம் மரபில் தோன்றிய உமாபதி சிவம் "பெற்றான் சாம்பான்" என்பவருக்குத் தீக்கை அளித்தார்.உமாபதி சிவம் பெருந்திருவிழாவின் போது, தூய தமிழில் கொடிக்கவி பாடத்தான் கொடி ஏறியது என்ற வரலாறு உண்டு.

திருவாசகத்தின் பொருள் யாது? என்று மாணிக்கவாசகரிடம் விளக்கம் கேட்டபொழுது, இறைவனே தம் திருவாசகத்தின் விரிபொருள் என்று விளக்கமாய்ச் சுட்டிக் காட்டினார்.

எந்தக் கடிதத்தை எழுதும் பொழுதும் திருவாசகத்தினை மேற்கோள் காட்டித்தான் ஜி.யு. போப் அவர்கள் கடிதம் எழுதுவார். அப்படி எழுதும் பொழுது ஊற்று எழும் அன்பால், உணர்வு மேலீட்டால் காதலாகி, கசிந்து கண்ணீர் மல்கிக் கண்ணீர்த் துளிகள் கடிதத்திலே விழுந்து விடுவது உண்டு! அதுபோது சில எழுத்துக்கள் காணாமல் போய் விடுவதும் உண்டு! கடிதத்தினை மாற்றி எழுதாமல் அப்படியே அனுப்பிவிட்டு ஜி.யு.போப் பின்வருமாறு குறிப்பிடுவார். "திருவாசகத்தால் எழுந்த கண்ணீரும் புனிதத் தன்மை வாய்ந்தது என்பதால் அந்தக் கடிதத்தை மாற்றி எழுதாமல் அப்படியே அனுப்பிவிட்டேன்" என்று ஜி.யு. போப் குறிப்பிடுவார்.

"யார் சதுரர்" என்று மாணிக்கவாசகர் இறைவனைப் பார்த்துக் கேட்கின்றார். கடைக்கோடி ஆன்மாவாகிய நான் கடைத்தேறிவிட்டேன்!

என்ன இறைவனுக்கு என்ன நன்மை?" என்று மாணிக்கவாசகர் கேட்கின்றார். ஒப்பாரும் மிக்காரும் இல்லாத உலகத் தலைவன் என்னால் கொள்வார். கடைஊழிக் காலத்தில் தாயும் இலி! தந்தையும் இலி! நான் தனியன்! என்ற நிலையில், தன் சரிபாதியாக இருக்கக்கூடிய தலைவியும் (உமாதேவி) ஒடுங்கிவிட்ட நிலையில், தனிமைத் துயரினைத் தவிர்த்துக் கொள்வதற்குத் தேனினும் இனியத் திருவாசகத்தினை இறைவன் தானே கைப்பட எழுதி, கைப்படியாகப் படிப்பதற்கு வைத்துக் கொண்டார்!

மாணிக்கவாசகரின் பண் சுமந்த பாடல்களுக்காக மண் சுமந்து தன் பொன் மேனியில் புண் சுமந்தார். ஒரு மாணிக்கவாசகரை ஆட்கொள்ள இறைவன் குதிரைச் சேவகனாக, கூலியாளாக வந்து அல்லல் பட வேண்டி இருந்தது! ஆன்மாக்கள் அனைத்தையும் தானே முன் வந்து ஈடேற்ற வேண்டிய கடமைக்கு உரியவன் இறைவன்! "ஆன்ம ஈடேற்றம்" அவன் தொழில்! அதனால் தான், "அவன் அருளாலே அவன் தாள் வணங்கி" என்பார் மாணிக்கவாசகர்!

திருவாசகம் மனித குலத்திற்குக் கிடைத்த பிறகு திருவாசகத்தினை ஓதினால் இறைவனின் திருவருளோடு ஒன்றிக் கலந்து ஆன்மா ஈடேற முடியும்! ஆன்மாவை ஈடேற்ற வேண்டிய இறைவனின் அரும் பெரும் திருப்பணியை திருவாசகம் நிறைவேற்றி விடுவதால் மாணிக்கவாசகரோடு கொண்ட உறவில் தமக்கே ஆதாயம் என்று இறைவன் எண்ணி மகிழ்வார்!

இறைவன் போற்றிய இனிய திருமுறைகளை தில்லைப் பதியில் திருச்சிற்றம்பல மேடையில் ஓதுவதற்கு இருந்த தடை நீக்கப் பாடுபட்ட ஆறுமுகசாமி என்ற சிவனடியாரின் தளராத முயற்சி பாராட்டுக்குரியது.

தமிழக அரசும், தமிழக அரசின் இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் மற்றும் செயலர் அவர்களும் திருச்சிற்றம்பல மேடையில் திருமுறைகள் பாட ஆணையிட்டு, அதைச் செயல்படுத்தி நிறைவேற்றித் தந்தது பாராட்டுக்குரியது!

தில்லைப்பதியின் திருச்சிற்றம்பல மேடையில் திருமுறைகள் ஓத பாடுபட்ட ஆறுமுகசாமி என்ற சிவனடியாரின் வறுமை நீக்கும் பொருட்டு மாதந்தோறும் ரூ. 3000/– தமிழக அரசு நிதியுதவி அளித்து இருப்பது பாராட்டுக்குரியது!

நினைக்க முக்தி தரும் திருவண்ணாமலைத் திருத்தலத்தில் தமிழக அரசின் இந்து சமய அறநிலையத் துறை நடத்தி வரும் அர்ச்சகர் பயிற்சிப் பள்ளியைப் பார்க்கும் நல்வாய்ப்புக் கிடைத்தது!

பிறப்பு (சாதி) வழிபட்ட நிலை, இறைவனின் மேனியை பக்தி உணர்வோடு தீண்டி பூசிப்பதற்குத் தடையா? என்ற கேள்விக்கு கண்ணப்பர் வழி விடை தந்தார் சிவபெருமான்!

91/1

இன்று நம் ஆதீனக் குருமுதல்வர் திருவருள்திரு தெய்வசிகாமணி சுவாமிகள் அவதரித்த திருவண்ணாமலையிலும் இதற்கு விடை கிடைத்தது! திருவண்ணாமலைத் திருக்கோயிலில் தமிழக அரசின் இந்து சமய அறநிலையத் துறையால் நடத்தப்படும் அர்ச்சகர் பயிற்சிப் பள்ளியில் எத்தனை தரப்பட்ட மாணவர்கள்! பிற்படுத்தப்பட்டவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் என்று எல்லாப் பிரிவினைச் சேர்ந்த மாணவர்களும் பயில்கின்றனர்.

எவ்வளவு அழகாய், பக்தி உணர்வோடு சுருதி சுத்தமாய், தாள லயத்தோடு பாடல்களை, சுலோகங்களை ஒருமித்துக் கூட்டாக ஓதுகின்றனர்!

இறைவா! நின் பெருங்கருணையே கருணை!

ஆகமம் போதிக்கும் ஆசிரியர் ராமகிருஷ்ணன், ஜீவா பணி மகத்தானது! போற்றுதலுக்குரியது! தீந்தமிழ்த் திருமுறைகளிலும் இம்மாணவர்களுக்கு ஆழங்கால் பட்ட நுண்மாண் நுழைபுலத்துடன், நயத்துடன் விளக்கும் அருந்தமிழ் ஆசிரியர் தலைமை ஆசிரியர் திரு. மு.சொக்கப்பன் M.A.,M.Phil., பணி பாராட்டுதலுக்குரியது!

அர்ப்பணிப்பு உணர்வுடன், கடமை உணர்வுடன் இப்பள்ளியை மிகச் சிறப்பாக நிர்வகித்து வரும் திருவண்ணாமலைத் திருக்கோயிலின் நிர்வாக அலுவலர் துணை ஆணையர் உயர்திரு. வாசுநாதன் M.A.,M.Phil., அவர்களின் பணி பாராட்டுக்குரியது. அறங்காவல் குழுவினரின் பணியும் பாராட்டுக்குரியது!

நம் ஆதீன உழுவலன்பர் திருவண்ணாமலை ராசாராம் அவர்கள் தொடக்க நிலையில், அனைத்து சாதியினரும் ஆன்மீகக் கல்வி பயில இயலுமா? என்ற ஐயத்தை எழுப்பினார்.

தமிழக அரசின் இந்து சமய அறநிலையத்துறை திருவண்ணாமலையில் நடத்தும் அர்ச்சகர் பயிற்சிப் பள்ளியில் பயிலும் மாணவர்கள் ஆகமம் மற்றும் திருமுறைப் பாடல்களைத் தெளிவாய் ஓதுவதைக் கேட்டு, தம் ஐயம் முற்றிலும் நீங்கிவிட்டது என மகிழ்வோடு தெரிவித்தார்.

"நானேயோ தவம் செய்தேன்!
சிவாய நம எனப் பெற்றேன்!"

என்ற மாணிக்கவாசகரின் விருப்பமும்,

வாருங்கள் வாருங்கள்! வைகுண்டத்தின் எல்லாக் கதவுகளும் திறந்திருக்கின்றன என்ற ராமானுஜரின் அழைப்பும் நனவாகிக் கொண்டிருக்கின்றது.

ஆன்மீக உலகில் தமிழும், தமிழரும் புறக்கணிக்கப்படும் நிலை மாறும் விதத்தில் "சேர வாரும் செகத்தீரே!" என்று அனைவரையும் அழைத்துச் செல்லும் ஆன்மீகத் தடத்தில் பயணம் செய்வோம்!

பொன்னம்பல அடிகள்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

திருக்குறள் உரை

(தவத்திரு குன்றக்குடி அடிகளார்)

85. புல்லறிவாண்மை

அறியாமை உடையவன் அறிஞனைப் போல நடிப்பது புல்லறிவாண்மை. அறியாமையுடையான் அறிவுடையான் போலத் தன்னைக் காட்டிக் கொள்வதால் அறிந்தவர்கள் சொல்வதை மறுப்பான்; ஏற்கமாட்டான். இல்லாத ஒன்றை இருப்பது போலக் காட்டி நடந்து கொள்வதால் புல்லறிவாண்மை என்று கூறப்பெற்றது.

புல்லறிவாண்மையுடையார் என்றுமே அறிந்தோராதல் அரிது.

அறிவின்மை இன்மையுள் இன்மை பிறிதுஇன்மை
இன்மையா வையாது உலகு. (841)

ஒருவனுக்கு இல்லாமை பலவற்றுள்ளும் இல்லாமை அறிவின்மையே. வேறு எது இல்லையானாலும் அதனை இல்லாமை என்று உலகத்தார் கருதார்.

அறிவுடையார் எல்லாம் உடையார். ஆதலால் பிறிதின்மை ஒன்று அமைய வழியில்லை.

அறிவிலான் நெஞ்சுவந்து ஈதல் பிறிதுயாதும்
இல்லை பெறுவான் தவம். (842)

அறிவிலான் நெஞ்ச மகிழ்ச்சியுடன் தருதல் தவத்தாலேயாம். வேறொரு காரணமும் இல்லை.

அறிவிலார் தாம்தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்கும் செய்தல் அரிது. (843)

நல்லறிவில்லாதவர் தாமே தமக்குச் செய்து கொள்ளும் வருத்தும் துன்பம் பகைவராலும் செய்தல் அரிது.

அறிவில்லாதார்க்குப் பகைவர் வேண்டாம். அவர்களுடைய அறியாமையே போதும் என்றுணர்த்தியது.

கள், தவறு முதலியவற்றாலும் பெருந்தீனியாலும் உடல் நலம் இழத்தலை நினைவிற் கொள்க.

வெண்மை எனப்படுவது யாதெனின் ஒண்மை
உடையம்யாம் என்னும் செருக்கு. (844)

புல்லறிவுடைமை என்று கூறப்படுவது யாதெனில் அறிவுடையோம் யாம் என்று செருக்குறுதல் ஆகும்.

"அறிவுடையோம்" - என்னும் செருக்கு அறிவு பெறுதலையும், அறிவில் வளர்தலையும் தடுத்துவிடும்.

கல்லாத மேற்கொண்டு ஒழுகல் கசடுஅற
வல்லதூஉம் ஐயம் தரும். (845)

புல்லறிவாளர்கள் தாம் கல்லாத நூல்களைக் கற்றார்போல் காட்டி ஒழுகுதல் கற்றவற்றின் மீதும் ஐயந்தோன்ற ஏதுவாகும்.

அறியாமையும் தெரியாமையும் குற்றமல்ல. அறிவுடையார் போல் நடப்பதுவே குற்றம்.

அற்றம் மறைத்தலோ புல்லறிவு தம்வயின்
குற்றம் மறையா வழி. (846)

ஒருவர் உற்ற துன்பத்தை மறைத்தல் அறியாமையின்பாற்படும், அறியாமைக்குக் காரணமாய குற்றங்களை மறைக்காத பொழுது...

மறைக்க வேண்டிய குற்றங்கள் ஆணவம், அடக்கமின்மை.

அருமறை சோரும் அறிவிலான் செய்யும்
பெருமிறை தானே தனக்கு. (847)

பெறுதற்கரிய உபதேசப் பொருளைப் பெற்றாலும் சோர்வின் காரணமாக இழக்கும் அறியாமையுடையோன் தனக்குத் தானே வருத்தம் செய்து கொள்கிறான்.

ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்
போஒம் அளவும்ஓர் நோய். (848)

சொன்னா:லும் செய்யமாட்டான். தானாகவும் அறிந்து செய்யமாட்டான். அத்தகையோன் சாகும் வரையிலும் சார்ந்தார்க்கு நோய் போல்வான்.

காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்
கண்டான்ஆம் தான்கண்ட வாறு. (849)

மெய்ப்பொருளைக் காணாதவன் மற்றவர்க்குத் தெரிந்தவன் போலக் காட்டுதல் பிறரால் அறிந்துகொள்ளக்கூடிய தன்மையை இழந்தவன். பிறருக்கு அறிவிக்கப் புகுதல் இழிவைத் தரும். அறிவிலாதான் தான் கண்டதையே கூறுவான்.

அறிவிலாதான் அறிவுடையான் போல நடித்தல் கூடாது. அறிவு வளரும் தன்மையது. ஆதலால் தாம் கண்டதையே கழறிக் கொண்டிருக்கக்கூடாது. அங்ஙனம் வாழ்வது அறிவின் வளர்ச்சியைக் கெடுக்கும்.

உலகத்தார் உண்டென்பது இல்என்பான் வையத்து
அலகையா வைக்கப் படும். (850)

உலகத்தார் உண்டு என்று கூறுவனவற்றை இல்லை என்று கூறுபவன் இந்த உலகத்தில் பேயாகக் கருதப்பெறுவான்.

உண்டு என்று கூறப் பெறுவன கடவுள், ஊழ் – நியதி முதலியன.

(தொடரும்)

மக்கள் சிந்தனை

உரிமை, பதிப்பு, அறிக்கை

1.	இதழின் பெயர்	:	மக்கள் சிந்தனை
2.	மொழி	:	தமிழ்
3.	வெளியீடு	:	திங்கள் இதழ்
4.	வெளியீடு இடம்	:	குன்றக்குடி – 630 206
5.	ஆசிரியர் } உரிமை	:	மரு. பரமகுரு திருவண்ணாமலை ஆதீனம், குன்றக்குடி
7.	பதிப்பாளர் } அச்சகம்		பழ. பாண்டித்துரை சண்முகநாதன் அச்சகம், மேலரத வீதி, குன்றக்குடி.
8.	பதிவு	:	செய்தி இதழ்

மேற்கண்ட விவரம் யாவும் உண்மை என்றும், நம்பத் தகுந்தவை என்றும் உறுதி கூறுகிறேன்.

நாள் : 16-3-2008

மரு. பரமகுரு

கண்ணகியும் காரைக்காலம்மையாரும்

(புலவர். ஆ. பழநி, காரைக்குடி)

இலக்கியங்களில் ஒன்றின் சாயல் மற்றொன்றின்மீது படிந்திருப்பது என்பது எதிர்பார்க்கக்கூடியதுதான். அச்சாயல் கதையின் கட்டுமானத்திலோ, காட்சிகளின் அமைப்பிலோ, பாத்திரங்களின் வெளிப்பாட்டிலோ, வருணனைப்போக்கிலோ அமைந்திருக்கலாம். இவைஎல்லாம் இலக்கியங்களுக்கிடையில் காணக் கிடைப்பவைதாம்.

ஐம்பது ஆண்டுகட்கு முன்னர் தமிழறிஞர் சேதுப்பிள்ளை அவர்கள் வேலும் வில்லும் என்றொரு நூலை எழுதினார். அதில் கந்தபுராணத்தின் கதை அமைப்புதான் இராமாயணத்தின் கதையாக உள்ளது என்பதை எடுத்துக்காட்டினார். இதையே தந்தை பெரியாரும் எடுத்துக்காட்டியதுண்டு.

இந்த வகையில் தமிழ் இலக்கிய உலகில் தலைசிறந்து விளங்கும் கண்ணகியும் காரைக்காலம்மையாரும், அவர்தம் கணவன்மாரும் எவ்வாறு ஒத்த தன்மை உடையவர்களாகவும், வேறுபட்ட இயல்பில் விளக்கமுள்ளவர்களாகவும் உள்ளனர் என்பதை ஒப்பியல் நோக்கில் எடுத்துக்காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

சிலப்பதிகாரத்தின் நாயகி கண்ணகி. காரைக்கால் அம்மையார் புராணத்தின் தலைவி புனிதவதி. இருவருமே வணிகர் குடியிற் பிறந்தவர்தாம். இரண்டு குடும்பங்களும் செல்வச் செழுமையில் எல்லையைக் கண்டவை என்றால் அது உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை. இருவருமே கடற்கரைப் பட்டினத்தில் தான் பிறக்கின்றார்கள். கண்ணகி காவிரிப்பூம்பட்டினத்தில், புனிதவதியார் காரைக்காலில். "போதிலார் திருவினாள்" என்று திருமகளாகவே இளங்கோவடிகள் கண்ணுக்குத் தெரிகிறாள் கண்ணகி. "திருமடந்தை அவதரித்தாள்" எனவந்து பிறந்தார், புனிதவதியார் என்பார் சேக்கிழார்.

"அழகின் கொழுந்து வளர்வது என வளர்வார்"- புனிதவதியார். "மாநாய்கன் குலக்கொம்பர்" என்பார் கண்ணகியை இளங்கோவடிகள்.

இருவருக்குமே நிகழ்ந்த திருமணம் ஆடம்பரமானது மட்டுமில்லை; ஆன்றோர்கள் பேசி முடித்த திருமணம்தான். காதல் திருமணம் என்று சொல்ல முடியவில்லை. திருமணத்திற்குப் பிறகாவது காதலித்து, அக்காதலில் நிலைத்து நின்றார்களா என்றால் அப்படியும் சொல்லமுடியவில்லை.

இருவருமே தனிமனை வாழ்க்கைக்குத் தள்ளப்படுகின்றனர். அறவோர்க்களித்தலும் அந்தணர் ஓம்பலும் துறவோர்க்கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலுமாகத்தான் இருவர் வாழ்க்கையும் கழிகின்றது.

இருவருமே ஒரு கட்டத்தில் கணவனைப் பிரிய வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகின்றார்கள். தனிமை வாழ்க்கையில் தணலில் புழுவாய் வேகின்றார்கள்.

இருவருக்குமே சக்களத்தியர் வாய்க்கின்றனர். பலகாலம் குடும்பம் நடத்தியும் இவர்கட்கு மகப்பேறு வாய்க்கவில்லை. இதில் என்ன கொடுமை என்றால் இவர்தம் சக்களத்தியர்க்கு அவ்வாய்ப்பு கிட்டுகின்றது. இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால் இருவருக்கும் பெண் குழந்தைகளே பிறக்கின்றன.

புனிதவதியார் தன் தசைப்பொதியைச் சிதைத்துக்கொண்டு, பிறர் கண்டு அஞ்சத்தக்க வடிவத்தைக் கொள்கின்றார். கண்ணகியோ தன் ஒற்றை முலையை அறுத்தெறிந்து அழகைச் சிதைத்து அஞ்சத்தக்க வடிவத்தைக் கொள்கின்றாள்.

புனிதவதியாரை இறைவன் தாமே எதிர்கொண்டு "அம்மையே" என அழைக்கின்றான். கண்ணகியை அமரர்க்கரசன் தமர்வந்து அழைக்கின்றனர். இருவருமே இறுதியில் தெய்வநிலையை எய்துகின்றனர். கண்ணகியின் பெயர் பத்தினிக்கடவுள் என்று மாறுகிறது. புனிதவதியார் பெயர் காரைக்காலம்மையார் என்று ஆகின்றது.

இவ்விருவருக்கும் அமைந்த ஒற்றுமைகளை நாம் இதுவரை கண்டோம். இவர்களை வேற்றுமைப்படுத்தும் நிகழ்ச்சிகள் ஏதும் இல்லையா என்றால் - "இருக்கின்றது; மிகவும் குறைவாக", என்றுதான் சொல்லவேண்டும்.

புனிதவதியார் சைவக்குடும்பத்தில் பிறந்து, சைவக் குடும்பத்திலேயே வாழ்க்கைப்பட்டு, ஐந்தெழுத்தையே ஓதி, சிவனடியார்களையே போற்றிய வாழ்க்கையினர்.

கண்ணகியோ ஆசீவகக் குடும்பத்திலே பிறந்து, மற்கவியை வழிபட்டு, சமணக் குடும்பத்தில் வாழ்க்கைப்பட்டு, அருகதேவனை வணங்கி இல்லறக் கடமைகளை நிறைவேற்றியவள்.

பிரிந்து சென்ற கோவலன் தானாகவே கண்ணகியை நாடி வருகின்றான். புனிதவதியாரின் கணவன் பரமதத்தனோ ஓடி ஒளிந்து வாழ்கின்றான். அவனைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டியுள்ளது.

கோவலன் கண்ணகியைப் பிரிந்து சென்றது ஆசை (மாதவி பாற் கொண்ட) காரணமாக. பரமதத்தன் புனிதவதியாரைப் பிரிந்து சென்றது அச்சம் காரணமாக. (இவள் மானுடப் பெண் அல்லள்; தெய்வத் தன்மையுடையவள் என்ற அச்சம்).

கண்ணகிக்கும் கோவலனுக்கும் இடைவெளி தோன்றிய வரலாற்றை வெளிப்படையாகவே சொல்லிவிடுகிறார் இளங்கோவடிகள். கோவலனிடம் இருந்த கலைநோக்கும் பாலியல் வேட்கையும் தாம் பிரிவுக்குக் காரணம் என்பதை யாரும் அறிந்து கொள்ளும் வகையில் இளங்கோவடிகள் படைத்துள்ளார்.

அறவோர்க்களித்தல், அந்தணரோம்பல் போன்ற அறச் செயல்களில் கண்ணகி ஈடுபடுவதைக் கோவலன் வெறுத்தான் என்று கூறமுடியாது. அப்படி ஒரு செய்தி காப்பியத்தில் இல்லை. அதுமட்டுமன்று, கோவலனே கருணை மறவனாகவும், இல்லோர் செம்மலாகவும், பல்லாண்டு புரந்த செல்லாச் செல்வனாகவும் இருந்து அறத்தின் மேன்மையை அறிந்தவன் ஆதலின் அவன் கண்ணகியின் அறச் செயல்களில் குறுக்கிட்டிருக்க முடியாது. குடும்ப வாழ்வில் இருவருக்கும் இடையில் வேறு மனக்கசப்புகள் உண்டா என்றால் இல்லை என்றுதான் கூறவேண்டும். அவ்வாறிருந்தும் கோவலன் ஏன் கண்ணகியைப் பிரிந்தான்? முன்னரே குறிப்பிட்டதுபோலக் கலைவிருப்பமும் நுகர்ச்சி வேட்கையும்தாம் என்பது விடையாக அமைகின்றது.

பரமதத்தனை நாம் கோவலனோடு ஒப்பிடமுடியவில்லை. கோவலனைப் போலக் கலை நாட்டம் ஏதும் பரமதத்தனுக்கு இல்லை. நுகர்ச்சி வேட்கை கொண்டலையும் இயல்பும் பரமதத்தனிடம் இல்லை. அவ்வாறாயின் பிரிய வேண்டிய நிலை ஏன் ஏற்பட்டது. பிரிவுக்கான காரணம் ஒன்று சேக்கிழாரால் சொல்லப்பட்டிருந்தாலும் அது மட்டுமே காரணம் என்று கொள்ளமுடியவில்லை.

பரமதத்தனும் புனிதவதியாரும் கோவலன் கண்ணகியைப் போல மனம் ஒத்தவர்களாக இல்லையோ என்ற ஐயம் நமக்குள் எழுகின்றது. இந்த ஐயத்தோடு மீண்டும் நாம் காரைக்காலம்மையார் புராணத்தைப் படிக்கின்றபோது பரமதத்தனுக்கும் புனிதவதியாருக்கும் இடையே இருந்த மன இடைவெளியை வெளிப்படையாகச் சொல்லவில்லை என்றாலும் குறிப்பாக வெளிப்படுத்தியே உள்ளார் சேக்கிழார். அப்படி என்ன தான் வெளிப்படுத்துகின்றார்.

1. பரமதத்தன் சிவனடியார்களைப் போற்றிப் புரப்பவனாகவோ - மரியாதை செலுத்துபவனாகவோ காப்பியத்துள் எங்குமே கூறப்படவில்லை. பிற அறச்செயல்களில் ஈடுபடுபவனாகவும் கூறப்படவில்லை.

2. பரமதத்தன் பணத்தைத் தேடுவதிலேயே குறியானவனாக இருக்கின்றான்.

"தகைப்பில் பெருங் காதலினால் தங்குமனை வளம்பெருக்கி
மிகப்புரியும் கொள்கையினில் மேம்படுதல் மேயினான்"

என்பார் சேக்கிழார். பரமதத்தன் பெருங்காதலனாகத்தான் இருக்கின்றான். புனிதவதியார் மீதா? இல்லை. தங்குமனை வளம் பெருக்குவதில் காதல் கொண்டிருக்கின்றான். அவன் காதல் பொருட் காதல். அந்தப் பொருட்காதலும் எப்படிப்பட்டது. பொருளை எவ்வளவு திரட்டமுடியுமோ அவ்வளவையும் திரட்டி எல்லாரினும் மேம்பட்டுத் திகழ வேண்டும் என்ற பேராசையை உள்ளடக்கியது. "மேயினான்" என்ற சொல்லாட்சி நமக்கு எடுத்து உணர்த்துவது என்ன? நினைப்பும் செயலும் அதுவாகவே இருந்தான் என்பதைத்தானே! இத்தகைய மனப்போக்கு உள்ளவனிடம் கொஞ்சம் இவறல் தன்மை (உலோபம்) இருந்தால் அதில் ஏதும் வியப்பில்லை.

கோவலன் பொருளைப் பிறருக்கு வாரி வழங்குவதில் முன்னணியில் இருந்தவன். ஆகவே அவன் மனைவிக்குப் பிறரைப் போற்றுவதில் கணவனிடமிருந்து தடையிருக்க வாய்ப்பில்லை. ஆனால் பரமதத்தனோ பொருளைத் திரட்டுவதும், அதில் யாரினும் மேம்பட்டுத் திகழ்வதுமே நோக்கமாகக் கொண்டிருந்தவன். பணம் செலவழிந்து கொண்டேயிருந்தால் பிறரைக் காட்டிலும் மேலானவனாக முடியுமா? முடியாதுதானே!

பரமதத்தனின் இத்தகைய மனப்போக்கு, புனிதவதியாரின் அடியார்ப் போற்றலுக்கு இடையூறாக மட்டுமில்லாமல் எதிர்ப்பாகவும் இருந்திருக்கக்கூடும் என்று தோன்றுகின்றது. இதற்கு என்ன ஆதாரம் என்று கேட்கக்கூடும். ஆதாரம் இருக்கின்றது.

பரமதத்தன் தன் கடையில் இருந்தபோது அங்கு வந்தோர் இரண்டு மாங்கனிகளைக் கொடுத்துச் சென்றனர். அவற்றை அவன் வீட்டிற்கு அனுப்பிவைத்தான். சிவனடியார் ஒருவர் பசியோடு வர அதில் ஒரு மாம்பழத்தை அடியார்க்கு வழங்கிவிடுகிறார் புனிதவதியார். உணவுண்ண வீட்டுக்கு வந்த பரமதத்தன் ஒரு மாம்பழத்தை உண்டபின் இரண்டாவது மாம்பழத்தையும் எடுத்துவரச் சொல்கின்றான். இங்கேதான் சிக்கல் தொடங்குகிறது. இல்லை; இங்கேதான் எல்லாச் சிக்கலுக்கும் விடை கிடைக்கின்றது.

பரமதத்தன் இரண்டாவது மாங்கனியை எடுத்துவரச் சொன்னதும் புனிதவதியார் என்ன சொல்லியிருக்கவேண்டும்? சிவனடியார்க்கு அதனை வழங்கிவிட்டேன் என்று கூறியிருக்கவேண்டும். அவ்வாறு கூறுவதுதான் இயல்பானது; சரியானது. ஆனால் புனிதவதியார் இறைவனை வேண்டி ஒரு பழம்பெற்று அதனைத் தருகிறார். ஏன் புனிதவதியார் உண்மையைக் கூறவில்லை? உண்மையைக் கூறமுடியாத நிலை அங்கே இருந்திருக்கின்றது என்பதுதான் நாம் அறியவேண்டிய செய்தி. புனிதவதியார் வேறு எங்கும் உண்மையை மறைத்துப் பொய் பேசியதாகக் காப்பியத்துள் நாம் காணமுடியவில்லை. உண்மையைக் கூறினால் கணவனின் வெறுப்புக்கு - சினத்துக்கு ஆளாக நேரிடும் என்று அஞ்சியிருக்க வேண்டும். இப்படிப் புனிதவதியார் அஞ்சியிருப்பார் என்றால் அடியார்ப் போற்றலை அவன் விரும்பவில்லை என்பதும், அவன் இவறல் தன்மை உடையவன் என்பதும்தாமே வெளிப்பட்டுவிடும். அதுமட்டுமன்று; இரண்டாவது பழத்தையும் அவன் எடுத்துவா என்று சொன்னபோதே தன்மனைவிக்கு அப்பழம் இருக்கட்டும் என்று எண்ணாது தானே அனைத்தையும் நுகரும் தன்னலக்காரனாகவும் அவன் இருந்தான் என்பதும் போதரும்.

இறைவன் கொடுத்த பழத்தைத் தின்ற பரமதத்தன் "இது முன்னர்த் தந்த பழமன்று; உண்மையைக் கூறு" என்ற பிறகும் கூடச் சிறிது மௌனம் காத்து இறுதியில்தான் வேறு வழியின்றி சிவனடியார்க்குத் தந்ததையும், இடர்ப்பாடான நிலையில் தன் வேண்டுதலுக்கு இரங்கி இறைவன் பழம் வழங்கியதையும் சொல்கின்றார் புனிதவதியார். தொடக்க முதலே சிவனடியார்க்குப் பழம் வழங்கியதை ஏன்

மறைக்க வேண்டும்? சிவனடியார்க்குப் பொருள் வழங்குதலை அவன் வெறுத்திருக்க வேண்டும். "இனிச் செய்யாதே" என்று எச்சரித்திருக்கவேண்டும். உண்மையைச் சொன்னால் கணவன் சினத்திற்கு ஆளாக நேரிடுமே என்று புனிதவதியார் அஞ்சியிருக்கவேண்டும். இதனால்தான் சிவனடியார்க்குப் பழம் வழங்கியதைச் சொல்லாமல் மறைக்கின்றாரோ என்ற ஐயம் எழுகின்றது.

இதிலிருந்து நாம் என்ன அறிந்து கொள்கின்றோம்? பரமதத்தனுக்கும் புனிதவதியாருக்கும் அடிப்படையான சிலவற்றில் மனக்கசப்பு இருந்திருக்கின்றது; அவன் தன்னலக்காரனாகவும், உலோபியாகவும் பணம் பணம் என்று அலைபவனாகவும் இருந்துள்ளான்; புனிதவதியாரோ எல்லாம் அடியார்க்கு வழங்குவதற்கே என்ற விரிந்த மனப்பான்மை உடையவராக இருந்திருக்கின்றார்; இந்த முரண்பாடு இவர்களுக்கிடையே ஒரு பெரிய இடைவெளியை ஏற்படுத்தி விட்டது என்பதைத்தானே!

இருவருக்கும் இடையே இருந்த இடைவெளி பற்றிச் சேக்கிழார் இலைமறைகாயாக ஏதேனும் வெளிப்படுத்தி உள்ளாரா என்பதையும் பார்க்கவேண்டும். புனிதவதியார் சிவனடியார்க்கு உண்பித்தலையும், பரமதத்தனுக்கு உண்பித்ததையும் தெரிவிக்கும்போது நுட்பமாகச் சில செய்திகளைச் சேக்கிழார் வெளிப்படுத்துகின்றார்.

"பாதங்கள் விளக்கநீர் முன்னளித்துப் பரிகலம்வைத்து
ஏதந்தீர் நல்விருந்தா இன்னழகில் ஊட்டுவார்"

என்கின்றார் சேக்கிழார். சிவனடியார் தம்மைத்தூய்மை செய்து கொள்ளும் பொருட்டு நன்னீர் எடுத்துக் கொடுக்கின்றார். உண்கலம் எடுத்து வைக்கின்றார். நல்ல விருந்தினராகப் போற்றி உபசரிக்கின்றார் புனிதவதியார்.

கணவன் பரமதத்தனையும் இப்படித்தான் உண்பித்தாரா என்றால் இல்லை என்றுதான் சொல்லவேண்டியுள்ளது. அவன் கடையிலிருந்து வருகின்றான். தானே சென்று நீராடி மீள்கின்றான். உண்ணுமிடத்திற்கும் அவன் தானாகவே (அழைக்கப்படாமல்) வருகின்றான். அதன்பின்னர் புனிதவதியார் அவன் உண்பதற்கு வேண்டியனவற்றைப் படைக்கின்றார்.

இங்கே சிவனடியார்க்கு உதவியதுபோல் அவன் நீராடுவதற்கு அவள் உதவியதாகக் கூறவில்லை. அதுமட்டும் அன்று; சிவனடியார்க்கு உண்பித்ததை "நல்விருந்தா இன்னடிசில் ஊட்டுவார்" என்கின்றார். பரமதத்தனுக்கு உணவிட்டதை "கற்புடைய மடவாரும் கடப்பாட்டில் ஊட்டுவார்" என்கின்றார்.

சிவனடியாரை உண்பித்தபோது புனிதவதியார் ஈடுபாட்டோடு செய்வது தெரிகின்றது. பரமதத்தனை உண்பித்தபோது அவ்வீடுபாட்டைக் காணமுடியவில்லை. தான் கற்புடைய பெண்ணாக இருப்பதனால் அம்மகளிர்க்குரிய கடமையுணர்ச்சி காரணமாக ஊட்டுவார் என்கின்றபோது ஈடுபாட்டோடு மேல்விழுந்து உபசரித்துச் செய்யும் ஆர்வத்தைக் காணமுடியவில்லை. இதனால் இருவருக்கும் இடையில் ஏதோ ஒன்று இருப்பது பளிச்சென்று புலப்படுகின்றது.

இதுவரை நாம் அவர்தம் வாழ்வில் நிகழ்ந்த நிகழ்ச்சியில் காணப்பட்ட இடைவெளியைக் கண்டோம். இனி நாம் காண இருப்பது கவிஞரே தன் கூற்றாக தரும் ஒரு செய்தியைக் காணப்போகிறோம் கவிஞர் அப்படி என்ன செய்தி தருகின்றார்?

சிவனடியார் உண்டு முடித்து இல்லத்தைவிட்டுப் போய்விட்டார். அதன் பின்பு பரமதத்தன் வீட்டுக்கு வருகின்றான். வருகின்ற அந்தச் செய்தியைச் சேக்கிழார்

"மற்றவர்தாம் போயினபின் <u>மனைப்பதியா கியவணிகன்</u>
உற்றபெரு பகலின்கண் ஓங்கியபேர் இல்லெய்தி"

என்கிறார். இதில் நாம் கூர்ந்து நோக்க வேண்டிய தொடர். "மனைப்பதியாகிய வணிகன்" என்பதுதான். சேக்கிழார் "மனைப்பதியாகிய கணவன்" என்று கூறியிருக்கலாம்; இன்றேல் "மனைக்கினியாள் மணவாளன்" என்றாவது கூறியிருக்கலாம். இப்படி எல்லாம் கூறியிருந்தால் இருவருக்குமான உறவு மிகச்சரியாக அமைந்திருந்தது என்று கொள்ள முடியும். ஆனால் அவரோ இப்படி எல்லாம் சொல்ல மனமில்லாதவராகி "மனைப்பதியா கியவணிகன்" என்கின்றார்.

அவன் மனைக்குத்தான் (வீட்டுக்குத்தான்) பதியாக (தலைவன்) இருந்தானே தவிர அவளுக்குப் பதியாக இல்லை என்பதை வெளிப்படுத்த விழைகின்றார் போலும். அதுமட்டும் அன்று; அவன் கடையில் மட்டும் வணிகனாக இல்லை; வீட்டிலும் அவன் வணிகனாக இருந்துள்ளான் என்பதையும், புனிதவதியாரை உயிரற்ற பண்டத்தைப் போன்று

எண்ணினானே தவிர உரிமையுள்ள மனைவியாக அவன் எண்ணவில்லை என்பதையும் "மனைப்பதியாகிய வணிகன்" என்ற தொடர் தோலுரித்துக் காட்டுகின்றது. கணவன் என்னாது வணிகன் என்றது எல்லாவற்றையும் வெட்ட வெளிச்சம் ஆக்கி விடுகிறது.

பொருள் சேர்ப்பதே குறியாகவும், பிறருக்கு வழங்குவதை வெறுப்பவனாகவும், தானே முதன்மை என்னும் தன்னலம் சார்ந்தவனாகவும், அன்பினைப் பகிர்ந்து கொள்ளும் உரிமை படைத்தவள் மனைவி என்ற எண்ணம் இல்லாதவனாகவும்தான் அவன் இருந்துள்ளான். ஆனால் புனிதவதியாரோ இவனுக்கு எதிரான குண இயல்பு கொண்டவராக இருந்துள்ளார் என்பதைக் காப்பியம் தெளிவாகக் கூறுகின்றது. இம்முரண்பாடுகள்தாம் இருவருக்கும் உள்ள இடைவெளியைப் பெரிதாக்கிப் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்திவிடுகின்றன.

புனிதவதியாரின் தெய்வத்தன்மை வெளிப்பட்ட உடனேயே அவளைப் பிரிந்து ஓடிவிட வேண்டும் என்று பரமதத்தன் முயல்வதில் இருந்தும், பாண்டி நாட்டுக்குப் புனிதவதியார் தேடிச் சென்று அவனைக் கண்டபோது அவன்தன் இளைய மனைவியோடும், குழந்தையோடும் வந்து அவள் காலில் வீழ்ந்து வணங்குவதையும், அவள்தன் தெய்வத் தன்மையால் தனக்கும் குடும்பத்துக்கும் கேடுசெய்து விடுவாளோ என்று அஞ்சுவதிலிருந்தும் நாம் அறிந்து கொள்வது என்ன? கடந்த காலத்தில் பரமதத்தன் புனிதவதியாரை நடத்திய முறை உயர்வானதாக இல்லை என்பதுதானே!

அவன் மனத்தில் அச்சம் இல்லை என்றால் அவள் தெய்வத் தன்மையைக் கண்டபின் உடல் சார்ந்த உறவை விலக்கி விட்டாலும் உடன் வாழ்வதிலேயே எண்ணம் கொண்டிருப்பான். அவனோ கண் காணாமல் ஓடிவிடுவதிலேயே குறியாக இருக்கின்றான் என்றால் அவன் அஞ்சுவதும் தெரிகிறது; கடந்த காலத்தில் அவன் அவளுக்கிழைத்த கொடுமையும் தெரிகின்றது.

கோவலனின் குறைபாடுகளை இளங்கோவடிகள் வெளிப்படையாகப் பேசியதுபோலச் சேக்கிழார் பேசவில்லை என்றாலும் அவற்றை உய்த்துணரும் வகையில் இலைமறை காயாக வெளிப்படுத்தி உள்ளார் என்பதை அறியமுடிகிறது. இவ்வாறு வெளிப்படுத்துவது கூட ஒரு சிறந்த உத்திதான். சேக்கிழாருக்கு இவ்வுத்தி நன்றாக கைவந்துள்ளது என்பதற்கான எடுத்துக்காட்டுதான் பரமதத்தனின் படைப்பு என்று சொல்லலாம்.

திருவள்ளுவர் விருது (2008) பெற்ற குன்றக்குடி தவத்திரு தெய்வசிகாமணி பொன்னம்பல தேசிக பரமாச்சாரிய அடிகளார் அவர்களின் சீரேத்தல்.

(மூத்த தமிழறிஞர். பெரும்புலவர். **ப. அரங்கசாமி**)

பூவுக்கு மணமுண்டு இயற்கை யாகப்
புனலுக்குக் குளிருண்டு இயற்கை யாகத்
தேவுக்கு அருளுண்டு இயற்கை யாகத்
துறவுக்கு நெறியுண்டு இயற்கை யாகப்
பாவுக்குப் பொருளுண்டு இயற்கை யாகப்
பைந்தமிழ்க்கு மரபுண்டு இயற்கை யாகப்
கோவேநும் தவநிலையில் உயர்ந்த ஞானம்
கொண்டதுவுன் பிறப்பானாம் இயற்கை யாக

வள்ளுவத்தைப் பட்டிதொட்டிப் பரப்பு கின்ற
வரலாற்றுப் பேரவையின் தலைமைக் கோவே
பள்ளத்தில் பாய்ந்தோடும் நீரைப் போலப்
பண்தமிழைக் கேட்போர்தம் உள்ளந் தன்னில்
வெள்ளம்போல் பாய்ந்தோடச் செய்யும் அந்த
வித்தையினைக் குருமணியே எங்கே கற்றீர்
வள்ளுவர்பேர் பெருவிருது பெற்ற தங்கள்
வளர்புலத்தைப் பாராட்டி வணங்கு வோமே.

வேறு சந்தம்

இந்து சிகாமணி ஏத்தி வழிபடும்
தெய்வ சிகாமணியே
வந்தனை வந்தனை வள்ளுவர் விருதுடன்
வாகுற வந்தனையே
தந்தனை தந்தனைத் தவநெறிக் கோலத்
தண்ணருட் காட்சியினைச்
சிந்தனையில் வைத்துச் செவ்வுடை வேந்துன்
சீரடி வாழ்த்துவமே.

புனல் – தண்ணீர் : 3) தே – தெய்வம்; பா – பாடல்; 3) இந்து சிகாமணி – இந்து – சந்திரன்; சிகாமணி – சிகரத்தில் (தலையில்) அழகாக வைத்துள்ளவன் (சிவபெருமான்); வாகுற – அழகாக.

(தை இதழ் தொடர்ச்சி)

அருட்திரு பாம்பன் சுவாமிகள் அருளிய திருக்குன்றக்குடிப்பதிகம் உரை

(சைவத்தமிழ்மணி.வித்துவான். **க. கதிரேசன்**)
(குன்றக்குடி ஆதீனப் புலவர்)

எட்(டு)உருத் தெய்வமும்நீயே எட்டுக்(கு) அதீதமும் ஆயே
தட்டுப் படாஅதீத சாமியும் நீஎன ஓர்வார்
முட்டுப்ப டாமல்வந்(து) என்றும் முற்றுச்செ யும்அருட்பொன்னைக்
கொட்டிக் கொடுக்கின்ற கோவே குன்றக் குடியுறை தேவே.

கூட்டுமுறை

ஆற்றொழுக்கு. அடியவர் ஓரும் நிலையை எனக்கும் அருள்கஎன்று வருவித்துக் கூட்டுக.

குறிப்புரை

எட்டுஉருத்தெய்வம் = எண்வகைத் திருமேனிகள் தாங்கிய தெய்வம் - சிவம். எண்வகைத் திருமேனிகளாவன நிலம், நீர், தீ, வளி, விண், ஞாயிறு. திங்கள், உயிர் என்பன. இதனை வடமொழியில் "அட்டமூர்த்தம்" என்பர். அதீதமும் ஆயே = மேம்பட்டதெய்வமும் நீயே ஆகி, தட்டுப்படாத = ஞானியர்க்கேயன்றிப் பிறர்க்குப் புலனாகாத. சாமி = ஞானவடிவன். ஓர்வார் = ஆராய்ந்து அறிந்த அடியவர். முட்டுப்படாமல் = வறுமையுறாமல் .என்றும் முற்றுச்செய்யும் = எக்காலத்தும் முழுமையுறச் செய்கின்ற. அருட்பொன் - உன் திருவருளாகிய பெறற்கரும் செல்வத்தை. கொட்டிக் கொடுக்கின்ற = அளவு குறியாது வாரி வழங்குகின்ற.

பொழிப்புரை

நிலம், நீர், தீ, வளி, விண், ஞாயிறு, திங்கள், உயிர் என்கிற எண்வகைத் திருமேனி தாங்கிய தெய்வமும் நீயே ஆவாய், இந்த எட்டுக்கு மேம்பட்ட தெய்வங்களும் நீயே ஆவாய்; ஞானியர்க்கேயன்றிப் பிறர்க்குப் புலனாகாத மிக மிக மேம்பட்ட ஞானவடிவனும் நீயே ஆவாய் என்று ஆராய்ந்து அறிந்த அடியவர், வறுமையுறாமல் எக்காலத்தும் அவர்களை முழுமையுறச் செய்யும் உன் திருவருளாகிய பெறற்கரும் செல்வத்தை அவர்கட்கு அளவு குறையாது வாரி வழங்குகிற கோவே! குன்றக்குடியுறை தேவே! அத்தகு அடியார் வாழ்வை எனக்கும் அருள்க.

விளக்கம்

உலகியல் தழைக்க, பெருமான் எண்வகைத் திருமேனி கொண்டு அருள்புரிவதைக் காரைக்கால் அம்மையார்;

"அவனே இருசுடர்தீ ஆகாசம் ஆவான்
அவனே புவிபுனல் காற்(று) ஆவான் - அவனே
இயமானன் ஆய்அட்ட மூர்த்தியுமாய் ஞான
மயனாகி நின்றானும் வந்து"

- அற்புதத்திருவந்தாதி.21

என்பார்.

"நிலம்நீர் தீவளி விசும்போ(டு) ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம்"

- தொல்.பொருள்.635

(கலத்தலாவது முத்தும் பவளமும் நிலமும் மாணிக்கமும் விரவினாற்போறல்; மயக்கமாவது பொன்னும் வெள்ளியும் செம்பும் உருக்கி ஒன்றாதல் போல: இளம்பூரணர் உரை.)

ஐம்பூதக்கலப்பும் மயக்கமுமே இவ்வுலகம் என்பது தொல்காப்பியர்க்கு மட்டுமன்றி இன்றைய அறிவியலார்க்கும் உடன்பாடே. உயிர்க்குலத்துக்குரிய உடம்புகளும் மற்றும் பிறவும் வாழவும், வளரவும் இருக்கவும் உதவுவன இருசுடர்களாதலின் அவற்றை முதலிலும், இவை அனைத்தின் உறுபயன் துய்ப்பன உயிர்களேயாதலின் இயமானனை இறுதியிலும் அம்மையார் வைத்தார்.

எண்வகைத் திருமேனிகட்கு மேம்பட்ட - அதீத - நிலை ஒன்பது. அவை அயன் அரி, அரன், மகேசன் என்ற உருவ நிலைகள் நான்கும், விந்து, நாதம் சத்தி, சிவம் என்ற அருவுருவ நிலை நான்கும், சதாசிவமாகிய அருவநிலை ஒன்றுமாகும்.

"அதீத சாமி" என்றது முற்கூறப்பெற்ற எல்லா நிலைகட்கும் மேம்பட்ட ஞானத்திருவுரு. இதனை

"அருவும் உருவும் அறிஞர்க்(கு) அறிவாம்
உருவும் உடையான் உளன்" - திருவருட்பயன் - 5

என்பார் உமாபதியார்.

(அறிஞர் = ஞானியர். அறிவாம் உரு = ஞானத்திருவுரு)

இந்த ஞானத்திருவுரு ஞானியர்க்கே புலனாவது என்பதை அப்பரடிகளும்

ஞானத் தால்தொழு வார்சில ஞானிகள்
ஞானத் தால்தொழு வேன்உனை நான்அலேன்

ஞானத் தால்தொழு வார்கள் தொழக்கண்டு
ஞானத் தாய்உனை நானும் தொழுவனே.

- திருமுறை.5. தனித்...3

என்பதால் அறிகிறோம்.

"சாமி" என்ற சொல் ஞானவடிவனாகிய இறைவனைக் குறிப்பது. இச்சொல்லின் இன்றைய வழக்குப்பற்றி அசதியாகும் நம் அடிகள்.

"எண்ணரிய உயிர்கள்எலாம் நீயிருக்கும் மூர்த்தம்என இயம்பு நூலோர்
தண்ணளிசால் "சாமி"எனும் பெயர் உனக்கும் சொலிஇந்தத் தரணி யோர்க்கும்
விண்ணவர்க்கும் விளம்பிடுதல், "சம்பு"எனும் இறைமொழியை நரிக்கும் மீப்போம்
வண்ணஇப நாவலுக்கும் வழுத்துதலை ஒக்கும் என்பார் வடிவேலோயே"

- குமாரனந்தலகரி.5

"சம்பு" என்ற சொல் சிவமாகிய உனக்கே பொருந்துவதிருக்க, உலகோர் அதனை நரிக்கும்; நாவல் மரத்திற்கும் வழங்குவது போல, "சாமி" என்னும் சொல் ஞானவடிவனாகிய உனக்கே பொருந்துவதிருக்க அதனை, இவ்வுலகில் உள்ள சிலர்க்கும் விண்ணவர்க்கும் வழங்குகின்றாரே! இது எப்படிப் பொருந்துமோ என்று நகைச்சுவை புலப்படக் கூறுகிறார்.

திருவருளைப் பொன்னாக உருவகித்தது, அது வீடுபேற்றை மட்டுமன்றி இம்மை நலன்களையும் அருள்வது என்பதால்.

முட்டுப்படாமையாவது மனத்தால், வாழ்வியற் பொருள்களால் வறுமையுறாமை.

கொடுத்தகோ என்றோ கொடுக்கும்கோ என்றோ கூறாது "கொடுக்கின்ற கோவே" என்றது ஏன்?

முக்காலத்தினும் ஒத்தியல் பொருளைச்
செப்புவர் நிகழும் காலத் தானே. - நன்னூல். சொல். 383

என்ற இலக்கணத்தையொட்டி, குன்றக்குடியான் நேற்றும் இன்றும் நாளையும் வழங்குகிறவன் என்று உணர்த்துதற்பொருட்டு.

இலக்கணக்குறிப்பு

எட்டுஉருத்தெய்வம் = தொகைக் குறிப்பு. தெய்வமும், அத்தமும், சாமியும் = எண்ணும்மைகள். நீயே ஆயே = தேற்றேகாரங்கள். முட்டு - முதனிலைத் தொழிற்பெயர். அருட்பொன் - உருவகம்.

(தொடரும்)

அருளாலய விருது

(தமிழாகரர். தெ. முருகசாமி, புதுச்சேரி)

பெண்மை போற்று! பெண்மை போற்று!
உண்மை அஃதே! உன்னையும் என்னையும்
பெற்றவள் பெண்ணே! உடன்பிறப் பான
உற்ற தமக்கை தங்கையும் பெண்ணே!
உறவுடன் வந்த மனைவியைச் சேரப்
பெறற்கரும் மக்களுள் பெண்ணும் உண்டு!
தந்தை தாயெனும் தெய்வந் தன்னுள்
தந்ததைப் பெற்றுத் தாங்கிடும் சிறப்பால்
தாயிற் சிறந்த கோயில் இல்லெனும்
நோயில் வார்த்தையை நோன்பாய்க் கொண்ட
திரு.வி. க.போல் பாரதி தானும்
பெருகிய முரசு கொட்டியே பெண்மை
வாழ்கெனக் கூத்து ஆடவே சொன்னார்!
வாழ்தமிழ்க் கவிஞர் பாரதி தாசனும்
சமுதா யத்தின் சமத்துவ வாழ்வில்
அமுதாம் பெண்கள் கண்களில் ஒன்றவர்
ஆதலால் அவரைப் போற்றுவம் என்றே
காதலால் சொன்னார்! இவையெலாம் உணர்ந்தே
தாய்ப்பால் தந்த தாயினும் சால
வாய்ப்பாய்த் தமிழ்ப்பால் தந்த தாயெனும்
அருள்நெறித் தந்தை அடிகள் பெயரில்
இருள்செறிக் கூந்தல் இளமக ளிர்க்காய்
கல்வி யியல்சேர் நற்கல் லூரியை
நல்கிய செயலைப் போற்றும் போது
குன்றக் குடியின் அருளா லயத்தின்
நின்ற புகழ்த்தேர் அச்சாம் இஃதெனக்
குமரி முதலாய் இமயம் வரைக்கும்
தமதாய் வாழ்த்துவர் தாரணி யோரே!
பொன்னம் பலரைப் புகழ்ந்து
பொன்னடி தன்னைப் போற்றிப் பொலிந்தே!

(சென்ற இதழ் தொடர்ச்சி)

பெரியபுராணம் புலப்படுத்தும் வாழ்க்கை நெறி

(புலவர். ச.மு. விமலானந்தம்)

3. இன்னா செய்தார்க்கும் இனியவே செய்தல்

"இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு"

என்றும்

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்"

என்றும் திருக்குறள் கூறுகிறது. இக்குறட்பாக்களுக்கேற்ப வாழ்ந்து வான்புகழ் பெற்றவர் மெய்ப்பொருள் நாயனார். அவர் திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்டு சேதி நாட்டைச் சிறப்பாக ஆண்டு வந்தார். அவர் சிவபக்தியில் சிறந்தவர்; வீரத்தில் மிக்கவர்; சிவனடியார்களை மதித்துப் போற்றுபவர். அவருடைய செங்கோலாட்சியை அனைவரும் போற்றினர். அதனால் பொறாமை கொண்ட பக்கத்து நாட்டரசன் முத்தநாதன் மெய்ப்பொருள் நாயனாரிடம் பகைகொண்டான். பலமுறை படையெடுத்து வந்து, போரிட்டுப் படைகளை இழந்து அவமானப்பட்டான். இறுதியில் சிவனடியார் வேடம் தாங்கிச் சென்று மெய்ப்பொருள் நாயனாரை வெல்ல விரும்பினான்.

முத்தநாதன் மெய்யெலாம் நீறுபூசி வேணிகள் (சடைகள்) முடித்துக் கட்டிக் கையினில் குறுவாள் மறைக்கப்பட்ட சுவடியைத் தாங்கி மைபொதி விளக்கே போல மனத்தினுள் வஞ்சனை வைத்துப் பொய்த்தவ வேடங்கொண்டு மெய்ப்பொருள் நாயனாரிடம் சென்றான்.

அப்போது அரசன் அந்தப்புரத்தில் இருந்தான். அவன் அருகில் அவன் மனைவி இருந்தார். அரசன் சிவனடியாரை வணங்கி வரவேற்றான்; உயர்ந்த ஆசனத்தில் அமரச் செய்தான். முத்தநாதன், "உம் சிவபெருமான் அருளிய, எங்குமில்லாத ஆகமத்தை உனக்கு உணர்த்த வந்தேன்; நீ தனியாக இருக்க வேண்டும்" என்றான். மன்னர்

மனைவியை அப்பால் போகச் செய்து "இப்போது அருள்க" என்று தலை தாழ்த்தி வணங்கினான். அப்போது முத்தநாதன் சுவடிக்கட்டை அவிழ்ப்பதைப் போன்று, அதனுள் மறைத்து வைத்திருந்த வாளை எடுத்துத் தான் நினைத்தபடியே செய்து முடித்தான். சேக்கிழாருக்கு மெய்ப்பொருள் நாயனாரை வாளால் குத்தினான் என்று சொல்ல மனம் வரவில்லை. அதனை மிகவும் பண்பாடாக முத்தநாதன் "தான் முன் நினைத்த அப்பரிசே செய்தான்" என்று கூறுகிறார். இவ்வாறு வன்செயல்களையும், மென்மையாகப் பண்பாடாகக் கூறும் பண்புமிக்கவர் சேக்கிழார். முத்தநாதன் தான் நினைத்ததைச் செய்து முடித்திருந்தாலும், அத்தீமையைப் பொறுத்துக் கொண்ட மெய்ப்பொருள் நாயனாரையே வென்றவராகக் கூறுகிறார். ("மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள் எனத் தொழுது வென்றார்")

அப்போது மெய்ப்பொருள் நாயனாரின் மெய்க்காப்பாளன் தத்தன் ஓடி வந்து முத்தநாதனை வாளால் தாக்க முயன்றான். அதைப் பார்த்த நாயனார், "தத்தா இவர் நமர்" என்று கூறித் தடுத்தார். மேலும், அவரை எவரும் தூக்காவண்ணம் தம் நாட்டின் எல்லைக்கு அப்பால் விட்டு வருமாறு தத்தனிடம் கூறினார். அவ்வாறே செய்து வந்ததைத் தத்தன் கூறியதைக் கேட்டபிறகே "திருநீற்றன்பு பாதுகாத்து உய்ப்பீர்" எனக் கூறி வீடுபேறடைந்தார்.

இவ்வாறு தன்னை வாளால் குத்தியவனுக்குத் தீமை செய்யாமல் நன்மை செய்யும் பண்புதான் வள்ளுவர் கூறும் "இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யும் இனிய பண்பாகும்" பாரதியாரும்,

"பகைவனுக்கருள்வாய் - நன்னெஞ்சே
பகைவனுக்கருள்வாய்"

என்று பாடினார்.

நாமும் மெய்ப்பொருள் நாயனாரைப் போல இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யும் சான்றோராக வாழ்வோமாக!

(தொடரும்)

தமிழ்த்தாய் மகிழ்கிறாள்

(தேசியகவிஞர். **வீ.கே. கஸ்தூரிநாதன்**)

குன்றக்குடி என்றபெயர் உலகம் எங்கும்
கொலுவிருக்க வைத்திட்ட அய்யா உங்கள்
அன்புவழி அறப்பணிக்கு விருது என்ற
ஆனந்தச் செய்தியினைக் கேட்டேன்! அந்த
இன்பத்தில் துள்ளுகிறேன் வார்த்தை இன்றி!
எம்குருவே வணங்குகிறேன் மனது ஒன்றி!
துன்பத்தில் உழலுகின்ற தமிழை மீட்க
தொண்டாற்றும் உங்களைநான் போற்று கின்றேன்!

மறந்துவிட்ட வள்ளுவத்தை மக்கள் நெஞ்சில்
மறுபடியும் ஊட்டுதற்கு உழைக்கும் உங்கள்
சிறந்துள்ள சேவைக்கு விருது வந்து
சேர்ந்துளது அதனாலே எங்கள் நெஞ்சம்
நிறைந்துள்ளது இன்றைக்கு மகிழ்வு பொங்கி!
நினைவுதனில் தமிழினத்தை, மொழியை வைத்து
பறந்தெங்கும் உழைக்கின்ற அய்யா உங்கள்
பண்புதனில் நனைந்துநான் போற்று கின்றேன்!

பெரியவரின் பாதையிலே நடந்து நித்தம்
பிள்ளைகளாய் எமைஎல்லாம் அணைத்துக் கொண்டு
சரியானச் சமுதாயம் அமைக்க வேண்டி
சலிக்காமல் பாடுபடும் முனிவர் தங்கள்
பெருவாழ்வு எங்களுக்கு ஊன்று சக்தி!
பிறப்பெடுத்த மாந்தருக்கு ஓர்கைக் காட்டி!
அரிதான விருதினியும் பெறுதல் வேண்டும்!
அதைக்கண்டு தமிழன்னை மகிழ்தல் வேண்டும்!

அறிவியல் உறவும் – ஆன்மீக உறவும்

(டாக்டர். **கே. பாலகிருஷ்ணன்**)

பாகம் - 13

மக்களின் அறியாமையை அகற்றுவதற்கு அடிகளார் அவர்கள் தன்னால் ஆன முயற்சிகளை எடுத்தார்கள் என்று குறிப்பிட்டோம். மாநிலத்தில் கிராமப்புறங்களில் பல இடங்களில் ஆரம்பப்பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் அமைத்து தரமான கல்வி கிடைக்கும் வாய்ப்பை ஏற்படுத்தியதும், மிகவும் பின்தங்கிய பகுதியில் கல்லூரி என்று அமைத்து கல்விப் பணியில் அடிகளார் அவர்கள் தன்னை ஈடுபடுத்திக் கொண்டதை அனைவரும் அறிவோம். குறிப்பாக கிராமப்புறங்களில் அறிவியல் கல்வியின் தரம் மிகவும் குறைந்திருப்பதைக் கண்டு மனம் வருந்தினார்கள். செக்ரியின் உதவியால் மைய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை மூலம் மாவட்டத்தில் 10 பள்ளிகளுக்கு அறிவியல் சோதனைக் கருவிகள் வாங்கிக் கொடுத்தார்கள். அருகிலுள்ள மற்ற பள்ளிகளுக்கும் அதைப் பயன்படுத்த அனுமதி வாங்கித் தந்தார்கள். திருப்புத்தூரில் மடத்திற்கு சொந்தமான இடத்தில் பொது ஆய்வகம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

1980-ஆம் ஆண்டு கிராமத் திட்டக்குழுவின் செயற்குழுக் கூட்டம் ஒன்று நடந்தபோது அடிகளார் அவர்கள் கூறியது நினைவு கூர்கிறோம்.

"குன்றக்குடி திருவிழாக்களுக்கு மக்கள் திரளாக வருகிறார்கள். அவர்கள் பயன்பெறும் வகையில் அறிவியல் கண்காட்சிகள் அமைத்தால் மக்களிடையே அறிவியல் விழிப்புணர்வை ஏற்படுத்த ஏதுவாகும். மாவட்டத்திலும் பல இடங்களில் முக்கியமாகப் பள்ளிகளில் அறிவியல் கண்காட்சிகள் அமைக்கவேண்டும்"

செக்ரி விஞ்ஞானிகள் அடிகளார் அவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப அதே ஆண்டு குன்றக்குடி உயர்நிலைப் பள்ளியில் மற்ற பள்ளிகளையும் இணைத்து மாணவ, மாணவிகள் பங்கேற்க பயன்தரும் கண்காட்சியை நடத்தினார்கள். இதைத் தொடர்ந்து மாவட்டத்தில் உள்ள எல்லா ஒன்றியங்களிலும் ஆண்டுக்கொரு பள்ளியைத் தேர்ந்தெடுத்து அறிவியல் கண்காட்சி நடத்தப்பட்டது. மாவட்ட அளவிலும் கண்காட்சிகள்

நடத்தப்பட்டன. பல ஆண்டுகள் தொடர்ந்து இந்த அறிவியல் கண்காட்சிக்கு அடிகளார் அவர்கள் வழிகாட்டி அனைத்து உதவிகளும் செய்தார்கள். கண்காட்சி 10 நாட்களுக்கு முன்பாக பள்ளிக்குச் சென்று அங்கு வேண்டிய வசதிகளை அறிந்து, தானே முன்னின்று செய்தும் கொடுத்தார்கள். குடிதண்ணீர் வசதி, கழிப்பறை வசதி, கூரை புதுப்பித்தல் போன்ற பல பணிகளுக்கு நிதி உதவியும் செய்ததோடு அல்லாமல், பங்கேற்றவர்களுக்கு வேண்டிய உணவு வசதிகளையும் மடத்தின் மூலம் செய்தார்கள். ஆதீன டிராக்டர்களில் உணவுப் பொட்டலங்கள் எடுத்துச் செல்லப்படுவது இன்றும் பசுமையான நினைவு. அப்பொழுது தமிழ்நாடு மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கழகத்தின் செயலர் முனைவர் திரு. தர்மலிங்கம் அவர்கள் நிதி உதவி செய்ததுடன் தானும் 3 நாட்கள் தங்கி அடிகளார் அவர்களுடன் கண்காட்சியில் ஊர்தோறும் சென்று பார்த்து ஊக்குவித்தது குறிப்பிடத்தக்கது. செக்ரி இயக்குநர் K.I. வாசு ஆய்வகத்தின் விஞ்ஞானிகளைப் பங்கு பறச் செய்து, தானும் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்கள். பள்ளித்துறை இயக்ககம், மாவட்ட கல்வித்துறை, அரசுத் துறைகள், பள்ளித் தாளாளர்கள், ஆசிரியப் பெருமக்கள், மாணவ, மாணவிகள், பொதுமக்கள் என அனைவரையும் ஈடுபடுத்தி உற்சாகப்படுத்தி கண்காட்சிகளை திருவிழாக்களாகவே அவர்கள் கனவை நினைவாக்கினார்கள்.

அறிவியலில் ஒரு பெரிய புரட்சி என்று சொல்லாவிட்டாலும், அவர்களுடைய முயற்சி கிராமப்புறங்களில் அறிவியல் விழிப்புணர்வை பெரிதும் உண்டாக்கியது. வேளாண்துறை, கால்நடைத் துறைகள் பங்கு பெற்று நவீன தொழில் நுட்பங்களை விளக்கியதனால் வேளாண் மக்களும் பயன்பெற்றார்கள்.

கடைசி சில ஆண்டுகள் அவர்கள் உடல்நிலை சரியில்லை. நடந்தால் மூச்சு வாங்கும் அந்த நிலையிலும் கிராமப்புறங்களுக்கு பயணம் செய்து, கண்காட்சிகளை பார்வையிட்டு மாணவர்களை கேள்வி கேட்டு ஊக்குவிப்பார்கள். சிவகங்கையில் ஒரு மாணவன் "கனவுக் கிராமம்" என்று ஒரு காட்சிப் பொருள் வைத்து நவீன வசதிகளுடன் கூடிய வீடுகள், சிறிய தொழிற்கூடங்கள், கல்விக் கூடங்கள், பூங்காக்கள் என்ற அனைத்தையும் சுட்டிக்காட்டியிருந்தான். "நமது நாட்டில் இந்த கனவு கிராமத்தை நிறுவ எவ்வளவு ஆண்டுகள் ஆகும்?" என்று அடிகளார் அவர்கள் கேட்டதற்கு "இன்னும் பல நூற்றாண்டுகள் ஆகும்" என்றான் அம்மாணவன். நீ முயற்சி செய்தால் பல ஆண்டுகளில் முடிக்கலாம் என்று அவனிடம் அடிகளார் அவர்கள் கூறினார்கள். பிப்ரவரி 28

அறிவியல் நாள் அன்று விஞ்ஞானிகளுக்கு பொன்னாடை போர்த்தியும், இனிப்புகள் வழங்கியும் மகிழ்ந்தார்கள்.

செக்ரியில் கணிதம் மற்றும் அறிவியல் ஆசிரியர்கள் தங்கிச் சிறப்பு பயிற்சி பெறுவதற்கு ஏற்பாடு செய்தார்கள். தமிழ்நாடு மாநில அறிவியல் தொழில்நுட்பக் கழகமும், செக்ரியின் கிராம அறிவியல் மன்றம் மற்றும் குன்றக்குடித் திட்டக்குழுவும் இணைந்து இதைச் செயல்படுத்தியது. அது போன்று தலைமை ஆசிரியர்களுக்கு கணினிப் பயிற்சி செக்ரியில் ஒரு வாரம் வழங்கப்பட்டது. அடிகளார் அவர்கள் ஆசிரியர்களுடன் தினமும் கலந்துரையாடி ஊக்குவிப்பார்கள்.

ஆசிரியர்கள் தினத்தன்று நிகழ்ச்சிகளில் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பான சேவைகளைப் பாராட்டிப் பரிசுகளும் வழங்குவார்கள்.

மாவட்ட அளவில் கல்வியின் தரத்திற்கும், அறிவியல் வளர்ச்சிக்கும் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி அர்ப்பணிப்புடன் செயல்பட்டார்கள். அவர்களுடன் இணைந்து விஞ்ஞானிகளாகிய நாங்களும் எங்களது சிறிய பங்காக அளித்ததில் வாழ்க்கையின் பேறாகக் கருதினோம்.

(தொடரும்)

சிவகாசி **எம். பால்ராஜ்** மறைவு

சிவகாசி அன்பர் திரு. **எம். பால்ராஜ்** அவர்கள் 1.3.2008இல் இயற்கை எய்தினார். அப்பெருமகனார் அருள்நெறித் தந்தையவர்கள் பாலும் சிறப்பாசிரியர் தவத்திரு பொன்னம்பல அடிகளார் பாலும் நிறையன்பு பூண்டொழுகியவர். உலகத் திருக்குறள் பேரவையின் வைரத் தூணாகத் திகழ்ந்தவர்; சிறந்த கல்வியாளர்; இப்பெருமகனாரை இழந்து துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அன்பர்களுக்கும் நண்பர்களுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் "மக்கள் சிந்தனை" ஆழ்ந்த இரங்கலைப் புலப்படுத்திக் கொள்வதோடு, அவர்தம் நல்லுயிர் இறைவன் திருவடி நீழலில் இன்ப அமைதிபெற இறைஞ்சுகிறது.

– ஆசிரியர்

திருவள்ளுவர் போற்றி

(பொன்செல்வம் (எ) சி. பன்னீர்செல்வம்,
செயங்கொண்டசோழபுரம்)

வள்ளுவப் பொருளே வாழி - திரு
வள்ளுவன் பெயரே வாழி
துள்ளுவோ மேதமிழ்பாடி - நாம்
சொல்லுவோ மேயவன் போற்றி! (வள்ளுவ)

கல்வியும் கேள்வியும் கூறி - அவன்
கண்கள் திறந்தான் வாழி
செல்வமும் அறனும் சேர்த்து - நாம்
செய்திடு வோமவன் வாழ்த்து! (வள்ளுவ)

செங்கோல் அரசினைக் காட்டி அவன்
சென்ற வரிதான் போற்றி
எங்கும் பரப்புரை செய்வோம் - நாம்
எடுத்திடு வோமவன் கோவில்! (வள்ளுவ)

குழந்தையின் மழலையைக் கேட்டு - அவன்
குழலையும் யாழையும் மறந்தான்
முழுமையாய் அவனில் கரைந்து - நாம்
விழுதாய் இருப்போம் வாரீர்! (வள்ளுவ)

அறிவோடு அன்பையும் குழைத்து - அவன்
அளந்து தந்தான் குறளை
பொறிபுலன் ஐந்திலும் புகுத்தி - நாம்
புதுநெறி சமைப்போம் வாரீர் (வள்ளுவ)

விருந்தோடு மருந்தும் சொன்னான் - அவன்
வினைசெயல் வகையும் சொன்னான்
பொருந்திய வாழ்வை நடத்தி - நாம்
அருந்தவன் அவன் சொல்கேட்போம்! (வள்ளுவ)

*பணிவோடு பண்பையும் இணைத்து - அவன்
அணிகலன் செய்தான் கண்டோம்
கனிவுடன் அவன்புகழ், வளர நாம்
காலம் கருதாது உழைப்போம்! (வள்ளுவ)*

*சுற்றமும் நட்பும் சூழ - அவன்
பெற்றவர் பேணிடச் சொன்னான்
நற்றவன் அவன் குறள் ஓதி - நாம்
நாளும் உயர்வோம் வாரீர்! (வள்ளுவ)*

*இன்சொலும் ஈகையும் நிறைந்தால் - அவன்
வென்றிடும் வாழ்க்கை என்றான்
நன்றியாய் வள்ளுவன் வழியில் - நாம்
நடந்தே இணைவோம் வாரீர்! (வள்ளுவ)*

*காலமும் இடமும் அறிந்து - அவன்
காத்திரு கொக்கெனச் சொன்னான்
ஞாலம் முழுவதும் அவன்பேர் - நாம்
நவின்றிடச் செய்வோம் வாரீர்! (வள்ளுவ)*

*உழவையும் மழையையும் உயர்த்தி அவன்
உயிர்த்தொழில் இதுவெனச் சொன்னான்
ஒழுக்கமும் விழுப்பமும் சேர்த்து - நாம்
வாழ்த்துவோம் வாரீர் ஒன்றாய்! (வள்ளுவ)*

நமது வருங்காலச் சந்ததிக்குச் சொத்துக்களைச் சேர்த்து வைப்பதை விட நல்ல பண்புகளை அவர்களுக்கு எச்சமாக விட்டுச் செல்லுங்கள். சுயமாக உழைக்கும் தன்னம்பிக்கை, விடா முயற்சி, நேர்மை இவற்றைச் சொத்தாக விட்டுச் சொல்லுங்கள். நல்ல பண்பு நலன்களை வளரும் தலைமுறையினருக்குக் கற்றுக் கொடுப்போம்! நாம் அடுத்த தலைமுறைக்கு எழுதித் தரும் உயிலில் சொத்துக்களின் பட்டியல் இருக்கலாம். நாம் வாழ்ந்த வாழ்க்கை அடுத்த தலைமுறை பின்பற்றும் உயிலாக மாற வேண்டும்.

- தவத்திரு பொன்னம்பல அடிகளார்
காற்றில் வந்த கருத்துமழையில் இருந்து

ஏக்கப் பெருமூச்சு!

(கவிவேந்தர் கா. வேழவேந்தன்)

கன்னிமரா நூலகத்துள் நுழைகின் றேன்நான்;
கவர்ந்தீர்க்கும் நூற்குவியல் காணு கின்றேன்!
என்னென்ன துறையிலெலாம் அறிஞர் கூட்டம்
எத்தனைஎத் தனைநூல்கள் படைத்தார் என்றே
உன்னிப்பாய் நோக்குகின்றேன்; மலைபோல் காணும்
உயர்நூல்கள் அத்தனையும் புரட்டிப் பார்க்க
என்ஆயுள் போதாதே என்றே எண்ணி
ஏக்கத்தால் மனமுடைந்து போகின் றேன்நான்!

எதிர்இருக்கும் சுழற்கோள உருண்டை தன்னை
ஏறெடுத்தே ஒருசுற்று சுற்று கின்றேன்!
புதிர்ப்படைப்பில் கடல்களினால் பிரித்துப் போட்ட
பூமியதன் கண்டமெலாம், அவற்றில் உள்ள
நதியோடும் நாடெல்லாம் கூர்ந்து நோக்கி
நாம்என்றோ இவற்றையெல்லாம் பார்ப்போம் என்றே
கதிகலங்கிப் போகின்றேன்! வாழ்நா ளுக்குள்
காண்போமா என்றெண்ணிக் கவலு கின்றேன்!

கடலோரம் நடக்கின்றேன்; அலைகள் வந்து
கைதட்டி அழைக்கும்பேர் ஆழிக் குள்ளே
நடமாடும் வண்ணவண்ண மீன்கள் தம்மை,
நண்டுகளை, முதலைகளைத் திமிங்கி லத்தைப்
படங்களிலே பார்ப்பதுபோல் நேரில் காணப்
பாரகத்தின் ஆறுகடல் வயிற்றில் மூழ்கி
நெடுங்காலம் உலவிவர எண்ணு கின்றேன்;
நீள்ஆயுள் இலையென்றே நொறுங்கு கின்றேன்!

“தமிழ்நாட்டின் புரட்சித் துறவி இளங்கோஅடிகள்!”

ருக்மணி இராமநாதன் அறக்கட்டளை நிகழ்த்திய சிலப்பதிகார விழாவில்
தவத்திரு பொன்னம்பல அடிகள் உரை!

பேராசிரியர் இராம. இராமநாதன் அவர்கள் நிறுவியுள்ள “ருக்மணி இராமநாதன் அறக்கட்டளை” சார்பில், அழகப்பா பல்கலைக் கலையரங்கத்தில் 29.2.08 ஆம் நாள் கலந்துகொண்டு, முனைவர் கா. மீனாட்சிசுந்தரம் எழுதிய, “சிலம்பில் பாத்திரங்களின் பங்கும் பண்பும்” என்னும் ஆய்வு நூலை வெளியிட்டுச் சிறப்புரை நிகழ்த்திய தவத்திரு பொன்னம்பல அடிகளார் “தமிழ் நாட்டின் புரட்சித் துறவி இளங்கோ அடிகள் ஆவார்” – என்று வருணித்தார்கள். அடிகளாரின் உரைச்சுருக்கம் வருமாறு :

“இளங்கோ அடிகள் வாழ்ந்த காலம் முடியாட்சிக் காலம்; ஏன் இளங்கோவே அரண்மனையில் பிறந்தவர்தான். சோதிடர் ஒருவர் சொன்னதை இளங்கோ மறுத்தார்; தனக்கு அரண்மனை, ஆட்சிபீடம், அதிகாரம் எதுவும் வேண்டாம் என வெறுத்தார்; தூயதுறவு மேற்கொண்டார். நம்முடைய இளங்கோ அடிகளுக்கு மனமாற்றம் ஏற்பட ஒரு போதிமரம் கூடத் தேவைப்படவில்லை; சோதிடர் கூற்று அறிவுக்கு, மரபுக்குப் பொருந்தவில்லை என்ற ஒரு சூழ்நிலை ஒன்றே போதுமானதாக இருந்தது. துறவியாக ஆனது மட்டும் புரட்சி இல்லை; முடிமன்னரை, அரண்மனையைப் பாடாமல் குடிமக்களைப் பாடிக் காப்பியம் தந்தாரே, அது புரட்சி; நாடு எப்படி இருக்கவேண்டும்? மன்னர் எப்படி இருக்க வேண்டும்? மக்கள் எப்படி இருக்க வேண்டும்? என்றெல்லாம் எடைபோட்டு மதிப்பீடு செய்தாரே அது புரட்சி! ஆட்சியை, அதிகாரத்தைக் கையில் வைத்திருக்கும் மன்னன், தான் குற்றவாளி என்று உணர்ந்துகொண்டதும் தனக்குத் தானே தண்டனை அளித்து உயிர் துறந்ததைப் பாடினாரே, அது புரட்சி! “பெண் என்பவள் ஓர் உடைமைப் பொருள்” என்று இருந்த நிலையை மாற்றி, “கண்ணகியை, மாதவியை உரக்கப் பேசவைத்துக் காப்பியம் படைத்தாரே, அது புரட்சி! நாடு நலமாக இருக்கவேண்டும் என்றால் வீடும், வீட்டில் பெண்மக்களும், நாட்டின் சான்றோரும் சிறப்பாக இருக்கவேண்டும் என்று உணர்த்தினாரே, அது புரட்சி!”

– (செய்தி ஆக்கம் : “மு.மு”)

அன்பான வேண்டுகோள்!

சமுதாய மாமுனிவராகத் திகழ்ந்த நமது அருள்நெறித்தந்தை தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் ஆழமான சிந்தனைகளை அடியொற்றி நடைபோடும் "மக்கள் சிந்தனை" மாத இதழ் மேலும் பலம் பெறுவதற்குத் தங்களின் ஆதரவு தேவை. நமது கருத்து பரவலாக மக்களைச் சென்றடைய இதழ் அவசியம்.

ஆயுள் சந்தாவாகவோ, அல்லது ஆண்டுச் சந்தாவாகவோ அல்லது புரவலர் தொகையாகவோ மக்கள் சிந்தனை இதழுக்கு வழங்கி மக்களின் சிந்தனைகளை அகம்கொண்டு வெளிவர உதவுங்கள். "மக்கள் சிந்தனை"யின் பணி சிறப்புடன் தொடர வாசகராக, படைப்பாளராக சந்தாதாரராக விளம்பரதாரராக மாறுங்கள்; இன்றே சமய சமுதாயப் பணியை வலிமைப்படுத்துங்கள்.

- ஆசிரியர்




அருள்நெறி முழக்கம்

ஆசிரியர் :
தவத்திரு குன்றக்குடி அடிகளார்

விலை : 40/-
பக்கங்கள் : 96பக்கங்கள்

அருள்நெறி பதிப்பகம்
குன்றக்குடி - 630 206
சிவகங்கை மாவட்டம்





சமய வாழ்வு

விலை : ரூ. 40/-
பக்கங்கள் : 176 பக்கங்கள்

காற்றில் வந்த கருத்துமழை

விலை : 70/-
பக்கங்கள் : 176 பக்கங்கள்

ஆசிரியர் : தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

திருமாறன் பதிப்பகம்
7/8 பீட்டர்ஸ் குடியிருப்பு
இராயப்பேட்டை
சென்னை - 600 014

MAKKAL CHINTHANAI - March 2008 Price Rs. 5-00

Date of Publication 20-03-2008

Register of News Paper for India No. 85913/81 Register No. KKD/04/2006-2008

பெறுநர்

திரு ஆதீனகர்த்தர் அவர்கள்
கோவிலூர் ஆதீனம்
கோவிலூர்
காரைக்குடி (வழி) அவர்கள்

அச்சிட்டோர் : சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி. ✆ : 264166